Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, டிசம்பர் 13, 2024 | இதழ் 244

# 11.75 லட்சம் செல்போனுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மழை வெள்ளம்: ஸ்டாலின் ஆய்வு 3 மாவட்ட கலெக்டர்களுடன் பேச்சு



சென்னை, 13 டிசம்பர் 2024: முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் நேற்று முதல் கனமழை பெய்துவருவதையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் பெ. அமுதா ஆகியோரிடமும் மற்றும் காணொலிக் காட்சி வாயிலாக திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட கலெக்டர்களிடமும் ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த 7 ந் தேதி அன்று வங்கக்கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி 10 ந் தேதி அன்று ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக வலுப்பெற்றது. அது பின்னர் இலங்கை மற்றும் தமிழ்நாடு கடலோரப் பகுதிகளை நோக்கி வரத் தொடங்கி தற்போது மன்னர் வளைகுடா பகுதியில் நிலவி வருகிறது. இதனால் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

இதுதொடர்பாக, அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள கடிதம் வாயிலாக அறிவிக்கப்பட்டதோடு 10 ந் தேதி அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட 17 மாவட்ட கலெக்டர்களுடன் காணொலி காட்சி வாயிலாக எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கேட்டறிந்து தகுந்த அறிவுரைகளை வழங்கினர்.

முதலமைச்சர் உத்தரவின்படி, கன மற்றும் மிக கனமழை பெற வாய்ப்பு உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கண்காணிப்பு அலுவலர்கள் அனுப்பி வைக்கப்பட்டு, கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகின்றனர். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் 12 ந் தேதி இரவு 8.30 மணி அளவில் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட கலெக்டர்களுடன் காணொலி வாயிலாக கலந்துரையாடி நிலைமையை கேட்டறிந்து, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கினார்.

இன்று காலை 8.30 மணி நிலவரப்படி, சராசரியாக, தென்காசியில் 16.3 செ.மீ., அரியலூரில் 15.9 செ.மீ., மயிலாடுதுறையில் 14.6 செ.மீ., திருநெல்வேலியில் 10.5 செ.மீ., தூத்துக்குடியில் 9.8 செ.மீ., கடலூரில் 9.5 செ.மீ., பெரம்பலூரில் 9.3 செ.மீ., விருதுநகரில் 7.3 செ.மீ., தஞ்சாவூரில் 7.2 செ.மீ., காஞ்சிபுரத்தில் 7.2 செ.மீ., திண்டுக்கல்லில் 6.7 செ.மீ., திருவாரூரில் 6.5 செ.மீ., செங்கல்பட்டில் 6.3 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

திருநெல்வேலி, அரியலூர், கடலூர், தென்காசி, தூத்துக்குடி, மயிலாடுதுறை, திருவாரூர், செங்கல்பட்டு மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 20 செ.மீ. முதல் 50 செ.மீ. வரை 49 இடங்களில் அதி கனமழை பெய்துள்ளது.

மேலும், 10 செ.மீ. முதல் 20 செ.மீ. வரை 139 இடங்களில் மிக கனமழையும், 6.5 செ.மீ. முதல் 10 செ.மீ. வரை 217 இடங்களில் கனமழையும் பெய்துள்ளது.

நேற்று முதல் பூண்டி, பிச்சாட்டூர் மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்கங்களில் இருந்து தகுந்த முன்னெச்சரிக்கை அறிவிப்புகளுடன் உபரி நீர் திறக்கப்பட்டது. இன்று செம்பரம்பாக்கம், புழல் மற்றும் சேத்தியார்தோப்பு ஏரிகளிலிருந்து உபரி நீர் திறப்பது குறித்து உரிய எச்சரிக்கை அளிக்கப்பட்ட பின்னர் திறந்துவிடப்பட்டுள்ளது.

நேற்று இந்திய வானிலை ஆய்வு மையம் தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதி கனமழை பெய்யும் என்று சிவப்பு அலர்ட் விடுத்தது. இதன் காரணமாக தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கனமழை ஏற்பட்டு, தாமிரபரணி ஆற்றில் 50 ஆயிரம் கன அடி தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றின் கரையோரம் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்ல மாவட்ட நிருவாகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் வெள்ள அபாயம் குறித்து 11.75 லட்சம் செல்பேசிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

அரியலூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்து இருவரும், சிவகங்கை மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் மின்சாரம் தாக்கி இருவரும் இறந்துள்ளனர்.

மயிலாடுதுறை, செங்கல்பட்டு உள்ளிட்ட 10 மாவட்டங்களில் மொத்தம் 117 கால்நடைகள் இறந்துள்ளன. அரியலூர், செங்கல்பட்டு உள்ளிட்ட 20 மாவட்டங்களில் மொத்தம் 438 வீடுகள் சேதமடைந்துள்ளன. 50 நிவாரண முகாம்களில், 2034 நபர்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அரியலூர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, திருச்சி, விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கும், மதுரை, திண்டுக்கல், கடலூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, ராமநாதபுரம், சேலம், விருதுநகர், சிவகங்கை, தேனி, கரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று இன்று ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட கலெக்டர்கள் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்ட போது, கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண பணிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, கனமழை காரணமாக மக்கள் வசிக்கும் தாழ்வான பகுதிகளில் சூழ்ந்துள்ள மழைநீரை உடனடியாக அகற்றிட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக முகாம்களை தயார் நிலையில் வைத்திருக்கவும் உத்தரவிட்டார். மேலும், முகாம்களில் மக்களுக்கு வழங்கிட உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதையொட்டி நிவாரண பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

இந்த ஆய்வின்போது, பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் வி.மோகனசந்திரம், கூடுதல் ஆணையர் (வருவாய் நிர்வாகம்) எஸ்.நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ‘உலக செஸ் சாம்பியன்’ குகேஷுக்கு ரூ.5 கோடி பரிசு: தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, 13 டிசம்பர் 2024: உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த டி. குகேஷ்க்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தற்போது சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் (ஃபைட் உலக சாம்பியன்ஷிப் 2024) தமிழ்நாட்டைச் சேர்ந்த டி. குகேஷ் நேற்று நடப்பு சாம்பியனான சீனாவின் டிங் லிரெனை வென்று சாதனை படைத்துள்ளார்.

மிக இளம் வயதிலேயே உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்று உலக செஸ் சாம்பியனாக வாகைசூடி சாதனை படைத்து, இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த டி. குகேஷை முன்னதாக தனது எக்ஸ் தளத்தில் பாராட்டி வாழ்த்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பதிவிட்டிருந்ததோடு, தொலைபேசி வாயிலாகவும் அவரைத் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ள குகேஷ்க்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கிட வேண்டுமென்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முதலமைச்சருக்குக் கோரிக்கை விடுத்திருந்தார். அதனையேற்று, டி. குகேஷை மேலும் ஊக்குவிக்கும் வகையில், அவருக்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்கு சிறப்பான முக்கியத்துவத்தை அளித்து வருகின்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து, பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளும் தமிழ்நாட்டில் அனைவரும் பாராட்டும் வண்ணம் நடத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் தமிழ்நாட்டில் கடந்த 2022 ம் ஆண்டு மிகச் சிறப்பாக திட்டமிட்டு, நடத்தப்பட்டன. அதில் பங்குபெற்று வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து வீரர்களையும் முதலமைச்சர் நேரில் அழைத்துப் பாராட்டி, பரிசுகளை வழங்கினார் என்பது நினைவிருக்கலாம்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்விசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## விடிய விடிய 54 செ.மீ. மழை: வெள்ளத்தில் மிதக்கும் திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு குற்றாலம் அருவிகளில் குளிக்கத் தடை



சென்னை, 13 டிசம்பர் 2024: திருநெல்வேலி மாவட்டத்தில் நேற்று இரவு தொடங்கி விடிய விடிய பெய்த கனமழையால் தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தாழ்வான பகுதிகளில் வெள்ளம் புகுந்து குடியிருப்புகளை சூழ்ந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்து பகுதியில் 54 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

அம்பை 36 செ.மீ., காக்காச்சி 35 செ.மீ., மாஞ்சோலை 32 செ.மீ., நாலுமுக்கு 31 செ.மீ., பாளையம்கோட்டை 26 செ.மீ. சேரன்மகாதேவி, பாபநாசம் 22 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

திருநெல்வேலி மாநகரப் பகுதியில் பெய்த கனமழை காரணமாக கே.டி.சி. நகர், கீழநத்தம் ஆகிய தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் புகுந்துள்ளது.

திருநெல்வேலி காட்சி மண்டபம் சாலையில் உள்ள குடியிருப்பு பகுதிகள், கோவில்களுக்குள் மழைநீர் புகுந்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.

திருநெல்வேலி ஜங்ஷன் மற்றும் மாநகராட்சி பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளதால், பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வர முடியாமல் முடங்கி உள்ளனர்.

செங்கோட்டை கேரளா சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டதால் சபரிமலை பக்தர்கள் தவித்து வருகின்றனர்.

கோவில்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் வீடுகளுக்குள் மழைநீர் முழங்கால் அளவுக்கு தேங்கியுள்ளது. சாலைகளிலும், தாழ்வான இடங்களிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் பொதுமக்கள் கடும் அவதி அடைந்துள்ளனர். தொடர்ந்து மழை பெய்து வருதால் வாகனங்கள் முகப்பு விளக்கை எரியவிட்டபடி செல்கின்றன. இளையரசனேந்தல் ரெயில்வே சுரங்கப்பாதையில் ஒரு அடி அளவுக்கு தண்ணீர் தேங்கியுள்ளது.

மழைக்கால அவசர உதவி எண்கள் வெளியிடப்பட்டுள்ளன . மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையம் 1077, 0462 2501012 மாவட்ட காவல்துறை 0462 2562500, 99527 40740 மாநகர காவல்துறை 0462 2562651, 89399 48100 தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் 0462 2572099, 73050 95952 மின்சாரம் தொடர்பான புகார்கள் 94987 94987

சீரமைப்பு பணிகளை துரிதப்படுத்த திருநெல்வேலி மேயர் ராமகிருஷ்ணன் அறிவுறுத்தியுள்ளார்.

கனமழை தொடர்பாக திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் இளம் பகவத் இன்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தென்காசி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி ஆகிய அணைகளில் இருந்து உபரி நீர் அதிகளவு வெளியேற்றப்படுவதால் தாமிரபரணியில் உள்ள மருதூர் அணைக்கட்டுக்கு வினாடிக்கு 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் கன அடி தண்ணீ வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 1500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. ஆற்றில் வந்து கொண்டிருக்கும் நீரின் அளவு அபாய கட்டத்தை எட்டவில்லை என்ற போதிலும் நீர்வரத்து மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தண்ணீர் மருதூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு பகுதிகள், அகரம், ஆழ்வார் திருநகரி, ஆத்தூர், முக்காணி, புன்னக்காயல் வழியாக கடலில் கலக்கும். எனவே தாமிரபரணி மற்றும் அதன் கிளை ஆறுகளின் கரையோரம் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள், தேவைப்பட்டால் நிவாரண முகாம்களுக்கு வந்து தங்குமாறும், மக்கள் யாரும் தாமிரபரணி ஆற்றில் குளிக்கவோ ஆற்றின் கரையோர பகுதிகளுக்கு செல்ல வேண்டாம்.

பல்வேறு அரசு துறை அலுவலர்கள் அவ்வப்போது வழங்கிடும் எச்சரிக்கைகளை ஏற்று நடந்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைத்திடவும் வீடுகளில் போதிய அளவு குடிநீர் மற்றும் அவசரகால பயன்பாட்டுப் பொருட்கள், தேவையான மருந்து மாத்திரைகள், இருப்பு வைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கனமழை காரணமாக அனந்தபுரி, கன்னியாகுமரி நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயில் திருநெல்வேலிக்கு தாமதமாக வந்து சேர்கின்றது. திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக பல்கலைக்கழக தேர்வு ஆணையர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச தர உயர்கல்வி: முதலமைச்சரின் உறுதி

சென்னை, 13 டிசம்பர் 2024: தமிழக உயர்கல்வித் துறையில் அமுல்படுத்தப்பட்டு வரும் புதிய திட்டங்கள் மற்றும் அதன் பயன்களை விவரிக்க உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் சமீபத்தில் கருத்து தெரிவித்தார். சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில் நடந்த உயர்கல்வித் துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டத்தில் அவர் கருத்து வெளியிட்டார்.தமிழ்நாட்டின் உயர்கல்வித் துறையை முன்னேறிய நாடுகளுக்கு இணையாக கொண்டு செல்லும் நோக்கத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார். கல்வி ஒருங்கிணைந்த முறையில் மேம்பட வேண்டும் என்பதற்காக, “நான் முதல்வன்” போன்ற திட்டங்கள் அறிமுகமாகி இதுவரை 27 லட்சம் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கியுள்ளன. முதலமைச்சராக பொறுப்பேற்றதுடன், பள்ளிப் படிப்பை முடித்த அரசு பள்ளி மாணவர்களுக்கு பொறியியல், மருத்துவம், விவசாயம் உள்ளிட்ட அனைத்து உயர்கல்விப் பாடப்பிரிவுகளிலும் 7.5% இட ஒதுக்கீட்டினை வழங்கி அரசே அவர்களின் கல்விக் கட்டணங்களை ஏற்கும் முடிவை எடுத்து சாதனை படைத்தார். இதனால் ரூ.213 கோடி பொறியியல் கல்விக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் உயர்கல்வி மாணவர் சேர்க்கை 47% அதிகரித்துள்ளது, இது இந்தியாவின் தேசிய சராசரியான 28%-ஐ விட மிகுந்தது. 2030க்குள் 50% இலக்கை அடைவதே ஒன்றிய அரசின் நோக்கம் என்றாலும் தமிழக அரசு இப்போதே அதனை எட்டியிருக்கிறது. “புதுமைப்பெண்” திட்டத்தின் மூலம் 7 லட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளதோடு, இவ்வாண்டு தொடங்கப்பட்ட “தமிழ்ப்புதல்வன்” திட்டத்திலும் 2 லட்சம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர். மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு உயர்கல்வி இடர்பாடுகளை குறைப்பதற்கான தேவைகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. உயர்கல்வி மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளை அறிந்து, மாணவர்களின் தகுதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. உயர்கல்வி, தொழில் உற்பத்தி மற்றும் தொழில் முன்னேற்றங்களில் உலகத் தரத்திற்குச் சமமான நிலையை தமிழ்நாடு அடைய வேண்டும் என்பது முதலமைச்சரின் நீண்டநிலைய நோக்கம். தமிழகத்தின் உயர்கல்வித் துறையின் வளர்ச்சிப் பயணத்தில், முன்னேற்ற நாடுகளின் தரத்துக்கு இணையான நிலையை அடைவது விரைவில் சாத்தியமாகும் என நம்பிக்கை நிறைய இருக்கிறது.

தமிழக உயர்கல்வித் துறையில் அமுல்படுத்தப்பட்டு வரும் புதிய திட்டங்கள் மற்றும் அதன் பயன்களை விவரிக்க உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் சமீபத்தில் கருத்து தெரிவித்தார்.

சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில் நடந்த உயர்கல்வித் துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டத்தில் அவர் கருத்து வெளியிட்டார்.தமிழ்நாட்டின் உயர்கல்வித் துறையை முன்னேறிய நாடுகளுக்கு இணையாக கொண்டு செல்லும் நோக்கத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்.

## அதிநவீன தொழில்நுட்பம், சிறந்த பாதுகாப்பு அம்சங்கள் கண்கவர் கம்பீரத் தோற்றத்தில் ஆல்-நியூ கேம்ரி ஹைப்ரிட் எலக்ட்ரிக் கார்: டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் அறிமுகம்



மதுரை, 13 டிசம்பர் 2024: இந்திய வாடிக்கையாளர்களின் தேவைகளை அறிந்து பல்வேறு புதிய கார்களை டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் அறிமுகம் செய்து வருகிறது. அந்த வரிசையில் தற்போது புதிதாக ஆல்-நியூ கேம்ரி என்னும் ஹைப்ரிட் என்னும் எலக்ட்ரிக் காரை அறிமுகம் செய்துள்ளது. இந்த கார் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் செடானில் இருந்து எந்தவித மாற்றமும் இல்லாமல் இன்றைய தலைமுறையினரை கவரும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கார்பன் மாசு இல்லா போக்குவரத்திற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தும் வகையில், ஆல்-நியூ கேம்ரி ஹைப்ரிட் எலக்ட்ரிக் கார் அதிநவீன 5வது தலைமுறை ஹைப்ரிட் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது, இது மேம்படுத்தப்பட்ட செயல்திறனை வழங்குகிறது. இந்த புதிய மாடல், அதிநவீன பாதுகாப்பு அம்சங்கள், மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்ட வெளிப்புறம் மற்றும் உட்புறம், அதிநவீன தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு ஆகியவற்றுடன் ஒப்பிடமுடியாத சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு நுகர்வோரின் தனிப்பட்ட விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படும் என்று இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த காரில் 3200 ஆர்பிஎம்மில் 221 என்எம் முறுக்குவிசையை வழங்கும் சக்தி வாய்ந்த ஆனால் செயல்திறன்மிக்க 2.5லி டைனமிக் போர்ஸ் என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது. எலக்ட்ரானிக் முறையில் கட்டுப்படுத்தப்படும் தொடர்ச்சியான மாறக்கூடிய டிரான்ஸ்மிஷன் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள இந்த கார் மென்மையான மற்றும் ஆற்றல்மிக்க ஓட்டுனர் அனுபவத்திற்கு உறுதி அளிக்கிறது. இதில் ஸ்போர்ட், ஈகோ மற்றும் நார்மல் என பல்வேறு ஓட்டுனர் முறைகள் உள்ளன. கூடுதலாக, டொயோட்டாவின் 5-ம் தலைமுறை ஹைப்ரிட் டெக்னாலஜி சிஸ்டம், அதிக திறன் கொண்ட லி-அயன் பேட்டரியைக் கொண்டுள்ளது. இந்த அதிநவீன ஹைப்ரிட் சிஸ்டம், லிட்டருக்கு 25.49 கிமீ செல்லும் சிறந்த எரிபொருள் சிக்கனத்தை வழங்குவதோடு இது சுற்றுச்சூழல் மீது அக்கறை உள்ள, சொகுசு செடான் கார்களை விரும்புபவர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய மாடல் அறிமுகம் குறித்து பேசிய டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் தலைவர், நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி மசகாசு யோஷிமுரா கூறுகையில், ஆல்-நியூ கேம்ரி ஹைப்ரிட் எலக்ட்ரிக் கார் அறிமுகம் என்பது, எங்களின் உலகளாவிய சுற்றுச்சூழல் சவால் 2050க்கு ஏற்ப எப்போதும் சிறந்த, நிலையான போக்குவரத்து தீர்வுகளை வழங்கும் எங்கள் எண்ணத்தை பிரதிபலிக்கிறது. இந்தியாவில் எங்கள் கார்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வரும் நிலையில், இந்திய அரசின் முக்கிய இலக்கான கார்பன் உமிழ்வை குறைக்கும் செயல்பாட்டுடன் எங்களின் கொள்கையும் ஒத்துப்போகிறது. இதை நோக்கி, தூய்மையான போக்குவரத்திற்கும், அதிக சுறுசுறுப்பு மற்றும் வேகத்துடன் வெகுஜன மின்மயமாக்கலை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தி வருகிறோம். அதன்படி, பசுமையான போக்குவரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில், எங்களின் ஆல்-நியூ கேம்ரி ஹைப்ரிட் எலக்ட்ரிக் காரை அறிமுகம் செய்துள்ளோம். கார்பன் இல்லா எதிர்காலத்தை வடிவமைப்பதிலும், மகிழ்ச்சியான சமுதாயத்தை உருவாக்குவதற்கான எங்களின் பங்களிப்பை மேலும் வலுப்படுத்துவோம் என்று தெரிவித்தார்.

டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் & லெக்ஸஸ் நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட கார்கள் வர்த்தக பிரிவு துணை நிர்வாக இயக்குனர் தடாஷி அசுமா கூறுகையில், சிறந்த செயல்திறன், நிலைத்தன்மை மற்றும் அதிநவீன கண்டுபிடிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து புதிய வாகனங்களை வடிவமைப்பதில் எங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை எங்களின் நியூ கேம்ரி பிரதிபலிக்கிறது. செடான் பாரம்பரியத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள ஆல்-நியூ கேம்ரி அதன் மேம்பட்ட 5வது தலைமுறை ஹைப்ரிட் சிஸ்டம், மேம்பட்ட செயல்திறன் மற்றும் விதிவிலக்கான வினைத்திறன் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் ஒப்பிடமுடியாத ஓட்டுநர் அனுபவத்தை வழங்குகிறது.

எங்களின் இந்த புதிய கார் அதன் அழகான வடிவமைப்பு, அதிநவீன சிறப்பு அம்சங்கள் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு அமைப்புகளுடன் எங்கள் வாடிக்கையாளர்களிடம் மிகுந்த வரவேற்பை பெறும் என்று நான் நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட கார்கள் வர்த்தக பிரிவு துணைத் தலைவர் சபரி மனோகர் கூறுகையில், ஆல்-நியூ கேம்ரி ஹைப்ரிட் எலக்ட்ரிக் கார் அறிமுகம் இந்தியாவில் எங்களுக்கு ஒரு அற்புதமான மைல்கல் சாதனையாகும். இந்த புதிய மாடல் அதன் 5வது தலைமுறை ஹைப்ரிட் டெக்னாலஜி, ஸ்டிரைக்கிங் டிசைன் மற்றும் சொகுசு வசதிகளுடன், இன்றைய தலைமுறையினரை கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்பான மற்றும் தடையற்ற ஓட்டுநர் அனுபவத்தை ஒவ்வொருவருக்கும் வழங்கும். வாடிக்கையாளர்கள் எங்கள் பிராண்ட் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத கார்களை விரும்பும் அவர்களுக்கு இந்த புதிய மற்றும் மேம்பட்ட மாடலை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம் என்று தெரிவித்தார்.

இந்த கார் ப்ரீஷியஸ் மெட்டல், டார்க் ப்ளூ, சிமெண்ட் கிரே மற்றும் எமோஷனல் ரெட் ஆகிய 4 வண்ணங்களில் வருகிறது. இந்த புதிய மாடலின் மற்ற அற்புதமான வண்ணங்கள் ஆட்டிட்யூட் பிளாக், பிளாட்டினம் ஒயிட் பேர்ல் ஆகியவை ஆகும். இதன் எக்ஸ்-ஷாரூம் விலை ரூ.48 லட்சம் ஆகும்.

இந்த காருக்கான பேட்டரி 8 ஆண்டுகள் அல்லது 160,000 கிமீ உத்தரவாதத்துடன் வருகிறது. நியூ - கேம்ரி ஹைப்ரிட் எலக்ட்ரிக் வாகனத்திற்கான முன்பதிவு தற்போது துவங்கி உள்ளது. அருகிலுள்ள டொயோட்டா டீலர்ஷிப்பிற்கு செல்லவும் அல்லது www.toyotabharat.com என்ற இணையதளத்தில் முன் பதிவு செய்யலாம்.

## சாம்பியன் பட்டம் வென்ற பின்னர் டி.குகேஷ் கூறியது

சென்னை, 13 டிசம்பர் 2024: சாம்பியன் பட்டம் வென்ற பின்னர் டி.குகேஷ் கூறியதாவது: உண்மையில் டிங் லிரென் ரூக்கியை எப் 2-க்கு நகர்த்திய போது, நான் உணரவில்லை. நான் அதை உணர்ந்தபோது, அது என் வாழ்க்கையின் சிறந்த தருணமாக மாறியது. டிங் லிரென் யார் என்று நம் அனைவருக்கும் தெரியும். அவர் பல ஆண்டுகளாக வரலாற்றில் சிறந்த வீரர்களில் ஒருவராக இருந்து வருகிறார். அவர் போராடுவதைப் பார்ப்பதற்கும், அவர் எவ்வளவு அழுத்தத்தை எதிர்கொண்டார் என்பதை பார்ப்பதற்கும், அவர் கொடுத்த போராட்டத்திற்கும். என்னை பொறுத்தவரை அவர், ஒரு உண்மையான உலக சாம்பியன். அவர் ஒரு உண்மையான சாம்பியனைப் போலவே போராடினார். டிங் லிரென் மற்றும் அவரது அணிக்காக நான் மிகவும் வருந்துகிறேன். நான் முதலில் டிங் லிரெனுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். அவர், இல்லாமல் இந்த ஆட்டம் ஒரே மாதிரியாக இருந்திருக்க முடியாது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## உலகளாவிய இ-கிரிக்கட் பிரீமியர் லீக் சீசன் 2 : சென்னை ஃபிரான்சிஸ் உரிமையாளர்களாக கோபால் ஸ்ரீனிவாசன், மதுசூதனன் ஆர், மற்றும் அர்ஜுன் சந்தானகிருஷ்ணன் ஆகியோரை வரவேற்கும் ஜெட்சின்தசிஸ்

சென்னை, 13 டிசம்பர் 2024: டிஜிட்டல் பொழுதுபோக்கு மற்றும் தொழில்நுட்பத்தில் உலகளாவிய தலைவரான ஜெட்சின்தசிஸ், டிவிஎஸ் கேபிடல் ஃபண்ட்ஸ் லிமிடெட் தலைவர் கோபால் சீனிவாசன், எம் 2 பி ஃபின்டெக் இணை நிறுவனர் மதுசூதனன் ஆர் மற்றும் ஜிஎஸ் குளோபல் குழு தலைமை நிர்வாக அதிகாரி அர்ஜுன் சந்தானகிருஷ்ணன் உள்ளிட்ட முக்கிய தொழில்துறை தலைவர்களை அதன் பிரபலமான ஐபி, குளோபல் இ-கிரிக்கெட் பிரீமியர் லீக்கின் (ஜி ஈ பி எல்) இரண்டாவது சீசனில் சென்னை உரிமையாளர்களாக சேர்ப்பதாக அறிவித்தது.

கோபால் சீனிவாசன், மதுசூதனன் ஆர் மற்றும் அர்ஜுன் சந்தானகிருஷ்ணன் ஆகியோர் ஜி ஈ பி எல்-ன் வளர்ந்து வரும் சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஏராளமான நிபுணத்துவத்தைக் கொண்டு வருகிறார்கள். சென்னை உரிமையை அவர்கள் கையகப்படுத்துவது நகரத்தின் கிரிக்கெட்டுடன் ஆழமாக வேரூன்றிய தொடர்பை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது, இது பொழுதுபோக்குக்கு அப்பாற்பட்டு சென்னையின் கலாச்சார அடையாளத்தின் மூலக்கல்லாக செயல்படுகிறது. அவர்களின் தலைமை மற்றும் தொலைநோக்குப் பார்வை, புதுமைக்கான அவர்களின் ஆர்வத்துடன் இணைந்து, இந்தியாவிலும் அதற்கு அப்பாலும் கிரிக்கெட் ஈஸ்போர்ட்டுகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் கருவியாக இருக்கும்.

மொபைல் பயன்பாடான ரியல் கிரிக்கெட்டில் ஹோஸ்ட் செய்யப்பட்ட குளோபல் எஸ்போர்ட்ஸ் பிரீமியர் லீக் (ஜிஇபிஎல்), ஜெட்சின்தசிஸின் வகை-வரையறுக்கும் கிரிக்கெட் வீடியோ கேம், மொபைல் பயனர்களுக்கு மிகவும் உண்மையான, அதிவேகமான மற்றும் அம்சம் நிறைந்த கிரிக்கெட் உருவகப்படுத்துதல் அனுபவத்தை வழங்குகிறது. கடந்த ஆண்டு போட்டி 200,000 க்கும் மேற்பட்ட பதிவுகளை ஈர்த்தது மற்றும் எட்டு அணிகளை உருவாக்கிய முதல் 64 வீரர்களை அடையாளம் காணும் கடுமையான தேர்வு செயல்முறையில் உச்சக்கட்டத்தை அடைந்தது. அதிரடி நிறைந்த இறுதிப் போட்டியில் இந்த எட்டு அணிகளும் ஒருவருக்கொருவர் விளையாடி உலகளாவிய ஈஸ்போர்ட்ஸ் வெற்றிக்காக போட்டியிட்டன. 70 மில்லியனுக்கும் அதிகமான ஒட்டுமொத்த பன்முகத் தளத்துடன், ஜிஇபிஎல் எஸ் 1 ஜியோ சினிமாவிலும் ஸ்ட்ரீம் செய்யப்பட்டது மற்றும் 1.1 மில்லியனுக்கும் அதிகமான நிமிடங்களில் குறிப்பிடத்தக்க பார்வையாளர்களைக் கண்டது.

ஜெட் சின்தசிஸ் நிறுவனத்தின் சிஈஓ மற்றும் நிறுவனர் ராஜன் நவானி கூறுகையில், "கோபால் சீனிவாசன், மதுசூதனன் ஆர் மற்றும் அர்ஜுன் சந்தானகிருஷ்ணன் ஆகியோர் சென்னை அணியின் உரிமையாளர்களாக இணைந்ததில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அவர்களின் ஒருங்கிணைந்த அனுபவம் ஒரு புதிய கண்ணோட்டத்தைக் கொண்டுவருகிறது, இது உலகளவில் கிரிக்கெட் ஈஸ்போர்ட்டுகளின் எல்லைகளைத் தள்ளுவதற்கான எங்கள் பார்வையுடன் சரியாக ஒத்துப்போகிறது. அவர்களின் ஈடுபாடு ஜி. இ. பி. எல்-ஐ வளர்ப்பது மட்டுமல்லாமல், கேமிங், தொழில்நுட்பம் மற்றும் கிரிக்கெட் ஆகியவை ஒன்றிணைந்து புதிய தலைமுறை விளையாட்டாளர்களை ஊக்குவிக்கும் ஒரு முழு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான எங்கள் தீர்மானத்தை வலுப்படுத்துகிறது".

புதிய அணி உரிமையாளர்களும் லீக்கில் சேருவது குறித்த தங்கள் உற்சாகத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

திரு. கோபால் சீனிவாசன் கருத்து தெரிவிக்கையில், "தொழில்நுட்பத்தின் உருமாறும் சக்தியில் உறுதியான நம்பிக்கை கொண்ட ஒரு நபராக, குளோபல் இ-கிரிக்கெட் பிரீமியர் லீக் மற்றும் சென்னை உரிமையை ஆதரிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். திறமைகளை வளர்ப்பதற்கும், உள்ளடக்கத்தை வளர்ப்பதற்கும் எஸ்போர்ட்ஸ் ஒரு தனித்துவமான தளத்தை வழங்குகிறது. எங்கள் வீரர்களின் நம்பமுடியாத திறன்கள் மற்றும் ஆர்வத்தைக் காணவும், உலகளாவிய ஈஸ்போர்ட்ஸ் நிலப்பரப்பில் இந்தியாவின் செல்வாக்கை விரிவுபடுத்தவும் நான் எதிர்நோக்குகிறேன் "என்று கூறினார்.

திரு. மதுசூதனன் ஆர் மேலும் கூறுகையில், "கிரிக்கெட் எப்போதுமே இந்தியாவில் ஒருமைப்படுத்தும் சக்தியாக இருந்து வருகிறது, மேலும் ஈஸ்போர்ட்ஸ் விளையாட்டுடன் நாம் இணைக்கும் முறையை விரைவாக மாற்றுகிறது. ஜி இ பி எல் லில் சென்னை உரிமையின் ஒரு பகுதியாக இருப்பது வளர்ந்து வரும் டிஜிட்டல் பார்வையாளர்களைத் தட்டவும், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்கவும் அனுமதிக்கிறது. திறமைகளை வளர்ப்பதற்கும், போட்டி ஈ-கிரிக்கெட்டின் எல்லைகளைத் தள்ளுவதற்கும் இந்த லீக் வைத்திருக்கும் திறன் குறித்து நான் உற்சாகமாக இருக்கிறேன்" என்றார்.

திரு. அர்ஜுன் சந்தானகிருஷ்ணன் கூறுகையில், "இ-கிரிக்கெட் விளையாட்டின் எல்லைகளை மறுவரையறை செய்து வருகிறது, மேலும் குளோபல் இ-கிரிக்கெட் பிரீமியர் லீக்கில் சென்னை உரிமையுடன் இந்த பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கிரிக்கெட், தொழில்நுட்பம் மற்றும் ஈஸ்போர்ட்ஸ் ஆகியவற்றின் கலவையானது ரசிகர்களின் ஈடுபாடு மற்றும் புதுமைகளுக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறது, மேலும் சென்னையிலிருந்து அடுத்த தலைமுறை ஈஸ்போர்ட்ஸ் திறமைகள் உலக அரங்கில் உயர்வதைக் காண நான் எதிர்நோக்குகிறேன் " என்றார்.

ஜிஇபிஎல் தலைமை நிர்வாக அதிகாரியும் லீக் கமிஷனருமான ரோஹித் பாட்ஃபோட், "கோபால் சீனிவாசன், மதுசூதனன் ஆர் மற்றும் அர்ஜுன் சந்தானகிருஷ்ணன் ஆகியோர் சென்னை அணியின் உரிமையாளர்களாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அவர்களின் பங்கேற்பு லீக்கிற்கு மகத்தான மதிப்பை சேர்க்கிறது, ஒரு தலைமைப் பார்வையில் மட்டுமல்ல, புதுமைகளையும் வீரர்களுக்கான புதிய வாய்ப்புகளையும் வளர்ப்பதன் அடிப்படையில். சீசன் 2 ஐ எதிர்நோக்கும் போது, லீக்கின் தடத்தை விரிவுபடுத்தவும், வீரர்கள் மற்றும் ரசிகர்களை ஒரே மாதிரியாக கவர்ந்திழுக்கும் இணையற்ற போட்டி அனுபவத்தை வழங்கவும் நாங்கள் கடுமையாக உழைத்து வருகிறோம்.

ஜி இ பி எல் லின் இரண்டாவது சீசன் ஒரு விரிவாக்கப்பட்ட அணி வடிவம், புதிய லீக் வழிகாட்டுதல்கள் மற்றும் மிகவும் தீவிரமான போட்டி கட்டமைப்பை அறிமுகப்படுத்த உள்ளது, இது சீசன் 1 இன் வெற்றியை அடிப்படையாகக் கொண்டது. ரியல் கிரிக்கெட் 24 நுணுக்கமான இயக்கவியல், சவாலான விளையாட்டு மற்றும் மூலோபாயத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் கிரிக்கெட் உருவகப்படுத்துதலுக்கான தரத்தை தொடர்ந்து அமைக்கிறது. ஜிஇபிஎல் சீசன் 2 க்கான இறுதிப் போட்டிகள் ஜனவரி 2025 இல் திட்டமிடப்பட்டுள்ளன, அங்கு சிறந்த அணிகள் உலக அரங்கில் 'இ-கிரிக்கெட் ஐகான்' என்ற மதிப்புமிக்க பட்டத்திற்காக மீண்டும் போட்டியிடும்.

## 'முன்னரே துவங்குங்கள், அடொபிக் டெர்மடைடிஸை தவிருங்கள்' எனும் உறுதிமொழியுடன் 11,000 க்கும் மேற்பட்ட இந்திய சுகாதார நிபுணர்களுடன் இணைந்து கின்னஸ் உலக சாதனை படைத்த அவீனோ பேபி

சென்னை, 13 டிசம்பர் 2024: குழந்தைகளின் மெருதுவான சருமத்திற்கு ஏற்ற சிறந்த தயாரிப்புகளாக யுஎஸ்#1 குழந்தை மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் அவீனோ பேபி நிறுவனமானது கின்னஸ் உலக சாதனையை படைத்துள்ளது. அதன்படி, 11201 இந்திய குழந்தை மருத்துவர்கள், தோல் மருத்துவர்கள் மற்றும் சுகாதார நிபுணர்களுடன் கைகோர்த்து, புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு மாய்ஸ்சரைசர்களை முன்கூட்டியே பயன்படுத்துவதன் மூலம் அடொபிக் டெர்மடைடிஸ் (ஏ டி) ஏற்படுவதை தடுப்பதாக உறுதியளிக்கும் வகையில், 'ஒரு வாரத்தில் தோல் நோய் விழிப்புணர்வுக்கான பெரும்பாலானோரின் உறுதிமொழிகள்' என்ற கின்னஸ் உலக சாதனைப் பட்டத்தைப் பெற்றது.

அடொபிக் டெர்மடைடிஸ் (ஏ டி) என்பது அரிக்கும் தோலழற்சி எனப்படும் எக்ஸீமா வகைகளில் மிகவும் பொதுவான வடிவங்களில் ஒன்றாகும், இது ஒரு நாள்பட்ட அழற்சி தோல் நிலை, இது உலர்ந்த, அரிப்பு தோல், செயலிழந்த தோல் ஆகியவற்றினால் ஏற்படலாம். குழந்தைகளில் ஏ டி மேலாண்மைக்கு ஆரம்பகால வரும்முன் காத்தல் முக்கியமானது. குழந்தைகளின் ஏ டி-பாதிப்புக்குள்ளாவது இந்தியாவில் அதிகளவில் பொதுவானதாகி வருகின்றன. ஆக, இது பற்றிய ஆழமான புரிதல் தேவைப்படுகிறது.

அடொபிக் டெர்மடைடிஸ் போன்ற சென்சிடிவ் வாய்ந்த தோல் நிலைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன், அவினோ பேபி நிறுவனமானது ஓட்ஸ் அடிப்படையிலான மாய்ஸ்சரைசர்களின் சக்தியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க, ஏ டி தோல் நிலைகளை சிறப்பாக நிர்வகிப்பதற்கான முக்கியத்துவத்தை எடுத்துரைக்க 'முன்னரே துவங்குங்கள், அடொபிக் டெர்மடைடிஸை தவிருங்கள்' எனும் கேம்பைனை துவங்கியுள்ளது.

அடொபிக் டெர்மடைடிஸ் உள்ள குழந்தைகளில் சுமார் 60% பேருக்கு முதல் வயதிலேயே அதற்கான அறிகுறிகள் உருவாக்குகிறது. மேலும் 90% ஐந்து வயதிற்குள் அறிகுறிகளைக் காட்டுகின்றன. குழந்தைகளில் காணப்படும் மிகவும் பொதுவான அறிகுறிகளில் சிவத்தல், அரிப்பு, வறண்ட தோல் மற்றும் சொறி ஆகியவை அடங்கும். பெரும்பாலும், குழந்தைகளில் சென்சிடிவ் வாய்ந்த தோல் நிலைகள் கண்டறியப்படாமல், நீடித்த தோல் அசௌகரியத்திற்கு வழிவகுக்கும். கணிக்க முடியாத வெடிப்புகள் குழந்தையின் தோலை மட்டும் பாதிக்காது, அவர்களின் இரவு தூக்கத்தினை சீர்குலைத்து, முழு குடும்பத்தின் நல்வாழ்வையும் பாதிக்கிறது. அவீனோ பேபி அண்ட் ஃபர்ஸ்ட் கிரை நடத்திய ஆய்வில், ஏறக்குறைய 82% இந்திய பெற்றோர்களுக்கு அடாபிக் டெர்மாடிடிஸ் பற்றி தெரிந்திருக்கவில்லை. அதனால், இது போன்ற தோல் நிலைகளை திறம்பட நிர்வகிக்க விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை அந்த சர்வே அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

திரு. மனோஜ் காட்கில், வணிகப் பிரிவு, உடல்நலம் மற்றும் தோல் ஆரோக்கியம் துறை மற்றும் துணைத் தலைவர் சந்தைப்படுத்தல், கென்வியூ பேசுகையில், "சென்சிடிவ் வாய்ந்த சருமத்துக்கு சிறப்பு கவனிப்பு தேவைப்படுகிறது. இன்று, குழந்தைகளின் சென்சிடிவ் வாய்ந்த தோல் நிலைகள் மற்றும் அதை நிர்வகிப்பதற்கான தேவையான சிகிச்சை நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வு குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. குழந்தைகளில் ஏ டி இன் நிகழ்வு மற்றும் தீவிரத்தன்மையைக் குறைக்க, ஒரு நிபுணர்/குழந்தை மருத்துவர் பரிந்துரைக்கப்பட்ட தயாரிப்பை பெற்றோருக்குக் கற்பிப்பதையும் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம். நாடு முழுவதும் உள்ள இந்தியாவின் முன்னணி சுகாதார நிபுணர்களுடன் கைகோர்ப்பதன் மூலம், குழந்தைகளின் அடொபிக் டெர்மடைடிஸ் போன்ற லேசான மற்றும் தீவிர சென்சிடிவ் கொண்ட தோல் நிலைகளை நிர்வகிக்க ஓட்ஸ் அடிப்படையிலான மாய்ஸ்சரைசர்களின் பங்கு பற்றிய விழிப்புணர்வை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். கின்னஸ் உலக சாதனையை அமைப்பதற்காக சுகாதாரப் பயிற்சியாளர்களிடம் இருந்து எங்களுக்கு கிடைத்த அமோக வரவேற்பு குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் ." என்றார்.

இந்த முன்முயற்சியானது விழிப்புணர்வை வலுப்படுத்துவதிலும், சென்சிடிவ் வாய்ந்த தோல் நிலைகளை நிர்வகிப்பதிலும் அவீனோ பேபி ஆற்றக்கூடிய சக்திவாய்ந்த பங்களிப்பை முன்னிலைப்படுத்தும் ஒரு கருவியாக இருக்கும்.

டாக்டர் அஜய் லால் எம் பி பி எஸ் டி சி எச், டெல்லி பேசுகையில், "ஏ டி இன் அபாயத்தைக் குறைப்பதில் மாய்ஸ்சரைசர்களின் ஆரம்பகால பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அவினோ பேபியின் இது ஒரு நல்ல முயற்சியாகும். சென்சிடிவ் வாய்ந்த சரும நிலைகள் கொண்ட பல குழந்தைகளுக்கு நான் அவீனோ பேபி ஐ பரிந்துரைத்து வருகிறேன், மேலும் இது ஏ டி இன் ஆபத்தை குறைப்பதோடு ஏ டி மீண்டும் வருவதையும் குறைக்கிறது" என்றார்.

ஹெல்த்கேர் சமூகம் மற்றும் பெற்றோர்களிடையே சென்சிடிவ் வாய்ந்த தோல் மற்றும் ஏ டி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, கென்வியூ ஆனது பெடிகான் 2024 இல், இந்திய குழந்தை மருத்துவ அகாடமியின் 61வது தேசிய மாநாட்டில், குழந்தைகளின் வறண்ட மற்றும் சென்சிடிவ் வாய்ந்த சருமத்தை நிவர்த்தி செய்வதற்கான சக்திவாய்ந்த தீர்வாக கூழ் ஓட்மீல் பற்றிய அதன் சமீபத்திய ஆய்வறிக்கையை காட்சிப்படுத்தியது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஐ ஏ பி நடத்திய அறிவியல் மாநாடு இந்நிகழ்வு கவனமீர்த்தது.

''முன்னரே துவங்குங்கள் ஏடி தவிருங்கள்' கேம்பைனின் ஒரு பகுதியாக, அவீனோ பேபி தனது விழிப்புணர்வு முயற்சிகளை முன்னணி குழந்தை மருத்துவர்கள், தோல் மருத்துவர்கள், நகரங்களில் உள்ள வல்லுநர்கள் மற்றும் வரும்முன் காத்தல் மற்றும் சென்சிடிவ் சருமத்தை நிர்வகிக்க மாய்ஸ்சரைசர்களின் பயன்பாடு பற்றிய அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான இன்ஃப்ளூயன்சர் பிரச்சாரங்களுடன், கலந்துரையாடலையும் தொடர்ந்துவருகிறது.

## சுவாமிமலை கோவில் தேரோட்டம் ரத்து

சென்னை, 13 டிசம்பர் 2024: கும்பகோணம் அருகே சுவாமி மலையில் சுவாமிநாத சுவாமி கோவில் திருத்தேரோட்டம் அலங்கரிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்த நிலையில் கனமழை காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முருகனின் அறுபடை வீடுகளில் 4ம் படை வீடான சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோவிலில் திருக்கார்த்திகை திருவிழா ஆண்டுதோறும் வெகு சிறப்பாக நடத்தப்படுவது வழக்கம். இதன்படி நிகழாண்டு திருக்கார்த்திகை நாளான இன்று திருவிழா நடைபெற இருந்தது. இதற்காக தேர் அலங்கரிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தது. இந்த நிலையில் கடந்த 2 நாள்களாக பெய்து வரும் தொடர் கனமழையின் காரணமாக தேர் முழுவதும் நனைந்து காணப்படுகிறது. இதனால் தேரை வடம் பிடித்து இழுத்து வர முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தேரோட்டம் ரத்து செய்யப்படுவதாகவும், மழை லேசாக விட்ட பிறகு சுவாமி அம்பாளை மட்டும் தேரின் உச்சி பீடத்தில் வைத்துவிட்டு இறக்கிவிட முடிவு செய்துள்ளதாக கோயில் நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# யமஹா புதிய ப்ளூ ஸ்கொயர் டீலர்ஷிப்பை புதுச்சேரி முதலமைச்சர் என். ரங்கசாமி மற்றும் யமஹா மோட்டார் இந்தியா விற்பனை இயக்குநர் செடோகாவா ஹிரோஷி தொடங்கி வைத்தனர்



சென்னை, 13 டிசம்பர் 2024: இந்தியா யமஹா மோட்டார் (ஐ ஒய் எம்) புதுச்சேரியில் புதிய ப்ளூ ஸ்கொயர் டீலர்ஷிப்பைத் திறப்பதாக அறிவித்தது, அதன் தேசிய வளர்ச்சி உத்தியின் ஒரு பகுதியாக அதன் இருப்பை விரிவுபடுத்துகிறது. தட்டாஞ்சாவடியில் அமைந்துள்ள புதிய ப்ளூ ஸ்கொயர், 6191 சதுர அடியில் பரந்து விரிந்து விற்பனை சேவை மற்றும் உதிரிபாகங்களுக்கான விரிவான வசதியை மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அதிவேக பிராண்ட் அனுபவத்தை வழங்கும்.

டீலர்ஷிப்பை மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் திரு. என். ரங்கசாமி மற்றும் யமஹா மோட்டார் இந்தியா விற்பனை இயக்குநர் திரு. செடோகாவா ஹிரோஷி ஆகியோர் தொடங்கி வைத்தனர், இது பிராந்தியத்தில் யமஹாவின் விரிவாக்கத்திற்கான குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். இந்த புதிய டீலர்ஷிப் மூலம், யமஹா இப்போது புதுச்சேரியில் 2 ப்ளூ ஸ்கொயர் ஷோரூம்களைக் கொண்டுள்ளது, யூனியன் பிரதேசத்தில் அதன் நெட்வொர்க்கை மேலும் வலுப்படுத்துகிறது.

இரு சக்கர வாகனங்களுக்கான தேவை அதிகரித்து வருவதாலும், மோட்டார் சைக்கிள் ஓட்டும் ஆர்வலர்களின் வலுவான சமூகத்தாலும், புதுச்சேரி யமஹாவின் முக்கியமான சந்தையாகத் தொடர்கிறது. ஏ எம் எஸ் மோட்டார்ஸின் திறப்பு இந்தியாவில் யமஹாவின் விரிவான டீலர் நெட்வொர்க்கை சேர்க்கிறது, இது சிறப்பான சேவை மற்றும் அனுபவத்தை வழங்குவதற்கான பிராண்டின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

ப்ளூ ஸ்கொயர் ஷோரூம்கள் சில்லறை விற்பனை இடங்களை விட அதிகம். யமஹாவின் பிரீமியம் மோட்டார் சைக்கிள் அனுபவத்திற்கான மையமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஷோரூம்கள், யமஹாவின் பந்தயப் பாரம்பரியத்தை 'ப்ளூ' சின்னத்தின் மூலம் உள்ளடக்கி, வாடிக்கையாளர்களுக்கு பிராண்டின் தயாரிப்பு வரம்பை ஆராய்வதற்கான அதிவேக சூழலை வழங்குகின்றன. ஷோரூம்களில் யமஹாவின் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களின் பிரீமியம் டிஸ்ப்ளே இடம்பெறுகிறது, மேலும் பலவிதமான உண்மையான பாகங்கள், ஆடைகள் மற்றும் உதிரி பாகங்கள் உள்ளன. அதிவேக அனுபவத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள ப்ளூ ஸ்கொயர் அவுட்லெட்டுகள் வாடிக்கையாளர்களை யமஹாவின் பந்தய பாரம்பரியத்தை ஒவ்வொரு டச் பாயிண்டிலும் இணைக்க அனுமதிக்கின்றன. கூடுதலாக, இந்த ஷோரூம்கள் யமஹாவின் ப்ளூ ஸ்ட்ரீக்ஸ் ரைடர் சமூகத்திற்கான மையங்களாக செயல்படுகின்றன, வாடிக்கையாளர்களுக்கு சக ஆர்வலர்களுடன் தொடர்பு கொள்ளவும், உற்சாகமான சவாரிகள் மற்றும் சமூக நிகழ்வுகள் மூலம் தங்கள் யமஹா இயந்திரங்களை அனுபவிக்கவும் வாய்ப்பளிக்கின்றன. இந்த விரிவாக்கம் யமஹாவின் தற்போதைய 'தி கால் ஆஃப் தி ப்ளூ' பிராண்ட் பிரச்சாரத்துடன் இணைந்து, இந்தியாவில் அதன் இருப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது மற்றும் ஒவ்வொரு பிராந்தியத்திலும் உள்ள வாடிக்கையாளர்களுடன் வலுவான உறவுகளை உருவாக்குகிறது.

# மணமகள் தோழிக்கு தேவையான மினுமினுப்பு: பெரிய நாளுக்கான சாந்தனத்தை உங்கள் நம்பகமான தேர்வாக மாற்றுங்கள்

சென்னை, 13 டிசம்பர் 2024: ஒவ்வொரு மணமகள் தோழியும், தனது தோழியின் வாழ்க்கையில் மிக முக்கியமான நாளில் தனக்கேற்றபடி அழகாகவும் பிரகாசமாகவும் தோன்ற விரும்புகிறார். முன்னோட்ட திருமண நிகழ்ச்சிகள் முதல் திருமண நாள்வரை, தேன் போன்ற தோல் ஜொலிக்க வேண்டியது அவசியம். அற்புதமான, களங்கமற்ற தோற்றத்தைப் பெறச் செய்யும் மிகவும் எளிய மற்றும் பலன் அளிக்கும் வழிகளில் ஒன்றாக சாந்தனம் திகழ்கிறது. இதன் அமைதியளிக்கும் தன்மைகள் மற்றும் தோல் நலன்களுக்காக பாராட்டப்படும் சாந்தனம், உங்கள் தோல் பிரகாசமாகவும் சுறுசுறுப்பாகவும் மாறச் செய்யும் உங்கள் ரகசியம் ஆக இருக்கலாம்.

இங்கே, உங்கள் முன்னோட்ட திருமண அழகு பராமரிப்பு திட்டத்தில் சாந்தனத்தை எவ்வாறு சேர்க்கலாம் என்பதைப் பார்ப்போம்:

பராமரிப்பு தொடங்க ஐடிசி ஃபியாமா சாண்டில்வுட் ஷவர் ஜெல் ஐ பயன்படுத்துங்கள்

ஜொலிக்கும் தோலுக்கு முதல் படியாகும் ஒரு சுறுசுறுப்பான குளியல், ஐடிசி ஃபியாமா-வின் சாண்டில்வுட் ஷவர் ஜெல் சிறந்த தேர்வு. சாந்தனத்தின் அமைதியளிக்கும் மற்றும் அழற்சி குறைக்கும் தன்மைகள், குறிப்பாக சமாளிக்க இயலாத அல்லது அழுத்தமடைந்த தோலுக்குப் பலனளிக்கின்றன. ஃபியாமா-வின் திரவம் நன்கு நுரைபடுத்து, உங்கள் தோலுக்கு மென்மையானது, ஈரப்பதமாகவும் ஆழமான ஊட்டச் செருத்தலாகவும் உணர்ச்சியை அளிக்கிறது. இந்த மெல்லிய ஆனால் செயல்திறன் மிக்க ஷவர் ஜெல், உங்கள் தோலை சுத்தமாகவும் புதுப்பித்ததாகவும் பராமரிக்க உதவுகிறது. இது பிரகாசமான தோற்றத்திற்கான அடிப்படையை அமைக்கிறது.

ஐ டி சி ஃபியாமா பிராண்ட் தூதர் ரஷ்மிகா மந்தனா கூறினார்:

"திருமண பருவத்தில் ஜொலிக்க எனது மிக முக்கிய ரகசியமான ஆயுதம் சாந்தனம்! சாந்தனத்தின் இயற்கை ஈரப்பதத்தைத் தரும் தன்மைகள், களங்கமற்ற மற்றும் ஜொலிக்கும் தோலை அடைவதற்கான கதவுகளைத் திறக்கின்றன. ஐ டி சி ஃபியாமா கோல்டன் சாண்டில்வுட் ஆயில் மற்றும் பாட்சோயிலி ஜெல் இன் தனித்துவமான கலவையான சாந்தன எண்ணெய் மற்றும் பச்சொல்லி, எனது உணர்ச்சிகளை அமைதியடையச் செய்து புத்துணர்ச்சி தருகிறது."

முகக்கவசம் மூலம் களங்கமற்ற தோற்றம்

உங்கள் தோல் பராமரிப்பு முறைசார்த்துக் கொள்ள விழையும் மணமகள் தோழிகளுக்கு, சாந்தன முகக்கவசம் பிரகாசமான தோற்றத்தை அளிக்க முடியும். சாந்தனம், சோர்வடைந்த தோலை ஜொலிக்கச் செய்யும், களங்கங்களை குறைக்கும் மற்றும் தோல் நிறத்தை சமப்படுத்தும் தன்மைகளை கொண்டுள்ளது. சந்தையில் தயாராக கிடைக்கும் சாந்தன முகக்கவசத்தைப் பயன்படுத்தலாம் அல்லது சாந்தன தூள், தயிர் அல்லது தேனுடன் சேர்த்து வீட்டிலேயே தயாரிக்கலாம். 15-20 நிமிடங்கள் முகத்தில் வைத்திருந்து, கழுவினால் உங்கள் புத்துணர்வான, ஜொலிக்கும் தோல் தெரியும்.

மணமகள் பரிசு

அழகு பராமரிப்பு முறையை ஒரு சாந்தன மணத்தைச் சேர்த்து நிறைவு செய்யுங்கள். மெலிதான சாந்தன மணம், உங்கள் முன்னோட்ட திருமணத்தில் இறுதித் தொடுதலாக உகந்தது. சாந்தனத்தின் சூடான, அமைதியான மணம் உங்கள் உள்ளார்ந்த ஜொலிக்கத் தகுந்ததாக இருக்கும்.

சாந்தனத்தை உங்கள் ரகசியக் கூறாக வைத்துக்கொள்வதன் மூலம், மினுமினுக்கும் தோற்றத்தை அடைவது மிகவும் எளிது. சுறுசுறுப்பான குளியல் முதல் முகக்கவசம் மற்றும் மெல்லிய மணம் வரை, உங்கள் தோல் பிரகாசமாகவும் மென்மையாகவும் மாற சாந்தனத்தை உங்கள் முன்னோட்ட திருமண அழகு பராமரிப்பு முறையில் சேருங்கள்.

சாந்தனத்தின் அமைதியளிக்கும், ஊட்டமளிக்கும் தன்மைகளை ஏற்றுக்கொண்டு, உங்கள் தோல் ஜொலிக்கும், குறைபாடற்ற அழகுடன் உங்கள் தோழியின் முக்கிய நாளில் நம்பிக்கையுடன் ஜொலிக்க தயார்.

# பூண்டி ஏரியில் இருந்து வெளியேறும் உபரி நீர் செம்பரம்பாக்கம், புழல், பூண்டி ஏரிகளிலிருந்து உபரிநீர் திறப்பு: வெள்ள அபாய எச்சரிக்கை



சென்னை, 13 டிசம்பர் 2024: கனமழை காரணமாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல், செம்பரம்பாக்கம், பூண்டி ஆகிய ஏரிகள் வேகமாக நிரம்பி வருவதை அடுத்து உபரி நீர் திறக்கப்பட்டுள்ள தால் தாழ்வானப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு முதற்கட்ட வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை நிலவரப்படி புழல் ஏரி நீர் இருப்பு 19.69 அடியாகவும், கொள்ளளவு 2950 மில்லியன் கன அடியாகவும் மற்றும் நீர் வரத்து வினாடிக்கு 2281 கன அடியாகவும் உள்ளது. ஏரியின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக நீர்வரத்து தொடர்ச்சியாக உயர்ந்து வருகிறது. எனவே அணையின் நீரினை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரியிலிருந்து இன்று காலை வினாடிக்கு 500 கனஅடி நீர் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏரிக்கு வரக்கூடிய நீர்வரத்து தொடர்ந்து அதிகபடியாகும் நிலையில் கூடுதல் உபரிநீர் படிப்படியாக திறக்கப்படும் என முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுகிறது.

எனவே புழல் ஏரியின் நீர் வெளியேறும் வாய்க்கால் செல்லும் கிராமங்களான நாரவாரிக்குப்பம், வடகரை, கிராண்ட்லைன், புழல் உள்ளிட்ட 'தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செம்பரம்பாக்கம் நீர் இருப்பு 23.29 அடியாகவும், கொள்ளளவு 3453 மில்லியன் கன அடியாகவும் மற்றும் நீர் வரத்து வினாடிக்கு 6498 கன அடியாகவும் உள்ளது. ஏரியின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக நீர்வரத்து தொடர்ச்சியாக உயர்ந்து வருகிறது. எனவே அணையின் நீரினை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்று காலை 8 மணியளவில் வினாடிக்கு 1000 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. ஏரிக்கு வரக்கூடிய நீர்வரத்து தொடர்ந்து அதிகபடியாகும் நிலையில் கூடுதல் உபரிநீர் படிப்படியாக திறக்கப்படும் என முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுகிறது. எனவே, தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை தருமாறும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இன்று பூண்டி நீர் இருப்பு 34.68 அடியாகவும் கொள்ளளவு 3041மில்லியன் கன அடியாகவும் மற்றும் பூண்டியின் நீர் வரத்து 9890 கன அடியாகவும் உள்ளது. தற்போது அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நீர்வரத்து தொடர்ச்சியாக உள்ளதால் சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. அணைக்கு வரும் நீர் வரத்து 35 அடியை தொட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுவதால் அணையின் வெள்ளநீர் வழிகாட்டுதலின்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்த்தேக்கத்திற்கு வரும் உபரி நீரை அணையின் பாதுகாப்பு கருதி நீர்த்தேக்கத்திலிருந்து இன்று காலை விநாடிக்கு 12,000 கன அடியாக உபரி நீர் வெளியேற்றப்படும்.

எனவே நீர்த்தேக்கத்திலிருந்து மிகை நீர் வெளியேறும் கொசஸ்தலையாறு செல்லும் கிராமங்களான நம்பாக்கம், கிருஷ்ணாபுரம். ஆட்ரம்பாக்கம். ஒதப்பை உள்ளிட்ட இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை தருமாறும் மேலும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை பாதுகாப்பாக இருக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

# கார்த்திகை மகா தீபத்தை ஸ்ரீ மந்திரின் நேரலை தரிசன அனுபவத்துடன் கொண்டாடுங்கள் அருணாசலேஸ்வர தீபத்தின் நேரலை தரிசனத்துடன் புனித அருணாசல தீர்த்த சிவ பார்வதி கல்யாணம், மகா ருத்ர ஹோமத்தில் ஆன்மிக விழிப்புணர்வு, விடுதலை பெறப் பங்கேற்கவும்




சென்னை, 13 டிசம்பர் 2024: இருளின் மீதான ஒளியின் நித்திய வெற்றியைக் கொண்டாடும், கார்த்திகை மகா தீபத்தின் புனித திருவிழா லட்சக்கணக்கான பக்தர்களுக்கு ஆழ்ந்த ஆன்மிக முக்கியத்துவம் நிறைந்தது. இந்தியாவின் மிகப்பெரிய பக்தித் தளமான ஸ்ரீ மந்திர், டிசம்பர் 13, 2024 வெள்ளிக்கிழமையன்று நடைபெறும் கார்த்திகை மகா தீபத்தின் நேரலை சிறப்பு தரிசனம் மூலம் பக்தர்கள் தரிசிப்பதற்கான சிறப்பு முயற்சியை பெருமையுடன் அறிவிக்கிறது. மங்களகரமான கார்த்திகை மகா தீபத் திதியுடன் கூடிய இந்த புனிதமான நிகழ்வை வீட்டில் இருந்தபடியே பக்தர்கள் தரிசிக்க முடியும். புனித நகரமான திருவண்ணாமலையில் ஏற்றப்படும் அருணாசலேஸ்வரர் மகா தீபம், அருணாச்சல தீர்த்த சிவன் பார்வதி கல்யாணம், மகா ருத்ர ஹோமம் ஆகியவற்றை நேரலை ஒளிபரப்பில் தரிசிக்க முடியும்.

தெய்வீக ஒளியைக் குறிக்கும் திருவிழாவான கார்த்திகை மகா தீபம் தென்னிந்தியா முழுவதும் ஈடு இணையற்ற உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. இந்த நிகழ்வு அருணாசலேஸ்வரர் கோவிலில் நிறைவடைகிறது. அங்கு புனிதமான அருணாசல மலையின் மீது மகா தீபம் ஏற்றப்படுவது ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான பக்தர்களை ஈர்க்கிறது. சிவபெருமான் ஜோதிர்லிங்கமாக (நெருப்புத் தூண்) வெளிப்படும் புராணக்கதையில் வேரூன்றிய இந்த திருவிழா, இருளின் மீதா ஒளியின் வெற்றியைக் குறிக்கிறது. அத்துடன் உள் வெளிச்சம் பெறுவதையும், கர்ம சுழற்சியில் இருந்து விடுதலைக்கான பாதையையும் வழங்குகிறது.

உலகெங்கிலும் உள்ள பக்தர்கள் இந்த ஆன்மீக பயணத்தில் சேர உதவும் வகையில் ஸ்ரீ மந்திரின் இந்த முன்முயற்சி பாரம்பரியம் மற்றும் தொழில்நுட்பத்தை இணைக்கிறது. இந்த நேரலை ஒளிபரப்பில் சிறப்பு அம்சமானது, மகா ருத்ர ஹோமத்தையும் உள்ளடக்கியது. இது எதிர்மறைதன்மையை அகற்றி செழிப்பை ஈர்க்கும் என்று நம்பப்படுகிறது. மேலும் அருணாசல தீர்த்த சிவன் பார்வதி கல்யாணம், அமைதி, ஞானத்திற்கான தெய்வீக ஆசீர்வாதங்களைத் தரும் ஒரு புனித சடங்கு. இதில் பங்கேற்பவர்கள் தியானம் செய்யலாம், மந்திரங்களை உச்சரிக்கலாம் அல்லது சடங்குகளுடன் ஸ்தோத்திரங்களை சொல்வதன் மூலம் சிவபெருமானுடன் ஆழமான தொடர்பை வளர்த்துக்கொள்ளகலாம்.

"ஆன்மீகம் என்பது அனைவருக்கும் அணுகக்கூடியதாக இருக்கும்போது, அது அர்த்தமுள்ளதாக மாறும். புனிதமான இந்தத் திருவிழாவை பக்தர்கள் எங்கிருந்தும் தரிசிக்க கார்த்திகை மகா தீபம் நேரலை சிறப்பு தரிசனம் அனுமதிக்கிறது. ஆன்மிக நம்பிக்கை, தொடர்பை அவர்களின் வாழ்க்கைக்கு நெருக்கமாக கொண்டுவருகிறது. அவர்கள் எங்கிருந்தாலும் ஆன்மீக அனுபவங்களை, அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்கான எங்கள் உறுதிப்பாட்டை இந்த முன்முயற்சி பிரதிபலிக்கிறது" என்று ஸ்ரீ மந்திர் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி பிரசாந்த் சச்சன் கூறினார்.

கார்த்திகை மகா தீபத்தின் உருமாற்றும் ஆற்றலைத் தழுவி, அருணாசலேஸ்வர தீபத்தின் தெய்வீக ஒளியை தங்கள் தளத்தில் காண ஸ்ரீ மந்திர் பக்தர்களை அழைக்கிறது. நேரலை தரிசனத்தை ஸ்ரீ மந்திர் செயலி மூலம் அணுக முடியும். இது தடையற்ற மற்றும் ஆழ்ந்த ஆன்மீக அனுபவத்தை உறுதிசெய்யும். இந்த புனிதமான கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதன் மூலம் சிவபெருமானின் நித்திய ஒளி அமைதி, செழிப்பு மற்றும் விடுதலையை நோக்கி உங்களை வழிநடத்தட்டும்.